WWW.ASKNETWORK.NET

Tamil

/ PRAY THE WORD FOR THOSE IN AUTHORITY/

அதிகாரத்தில் இருப்பவர்களுக்காக வேதவசனங்களை சொல்லி ஜெபியுங்கள்

*நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். **1 தீமோத்தேயு 2:1–4***

எப்படி, யாருக்காக, ஏன், மற்றும் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதை இந்த வேதப்பகுதி எடுத்துரைக்கிறது.

எப்படி ஜெபிக்க வேண்டும்: விண்ணப்பங்கள், ஜெபங்கள், வேண்டுதல்கள் மற்றும் ஸ்தோத்திரங்களோடு ஜெபிக்க வேண்டும்.

பலவிதமான ஜெபங்களைக் கற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியானவர் உங்களை நடத்த அனுமதிக்க வேண்டும். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள எல்லா ஜெப வகைகளும் பன்மையில் இருப்பதைக் கவனியுங்கள். அதற்கு, அதிகமான ஜெபம் அவசியம் என்று அர்த்தம்.

யாருக்காக ஜெபிக்க வேண்டும்: எல்லா மனுஷர்களுக்காகவும், ராஜாக்களுக்காகவும், அதிகாரத்தில் இருக்கிற அனைவருக்காகவும் ஜெபிக்க வேண்டும். ஏன் ஜெபிக்க வேண்டும்:

யுத்தம் மற்றும்/அல்லது உபத்திரவத்திற்கு மத்தியில் வாழ்வதற்கு மாறாக, ஜீவனை மதித்து, தேவபயத்தோடு வாழும் ஒரு சமுதாயத்தில் கலகமில்லாமல் அமைதலாக வாழ ஜெபிக்க வேண்டும்.

எதற்காக ஜெபிக்க வேண்டும்: 1 தீமோத்தேயு 2:4 “எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் விரும்புகிறார் (சித்தம் கொண்டிருக்கிறார்).”

இரட்சிப்பு என்பது விரிவான அர்த்தத்தைக் கொண்ட ஒரு வார்த்தை. அது நம் வாழ்நாள் முழுவதும் செயல்பட்டு, நம்மில் நிறைவேறிக்கொண்டே இருக்கிறது. பிலிப்பியர் 2:12. இயேசுவை நம்முடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் ஆரம்ப அனுபவம், நாம் தேவனை அறியவிடாமல் தடுக்கும் நம் பாவத்தை நீக்குகிறது. நம்முடைய ஆவி மறுபடியும் பிறந்து, நாம் தேவனுக்காகவும் ஆவிக்குரிய காரியங்களுக்காகவும் பிழைத்திருக்கிறோம். யோவான் 3:5–8.

இரட்சிப்பு — புதிய ஏற்பாட்டில் இரட்சிப்பு என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை சோஸோ (Sozo); இதற்கு இரட்சிக்கப்படுதல் என்று அர்த்தம். பாவ மன்னிப்பு, சரீரப் பாதுகாப்பு, விடுதலை, சரீர சுகம் மற்றும் அற்புதமான வல்லமை ஆகிய இரட்சிப்பின் பல்வேறு அம்சங்களை லூக்கா 7 மற்றும் 8-ஆம் அதிகாரங்கள் காண்பிக்கின்றன.
அதிகாரத்தில் இருப்பவர்கள் இரட்சிப்பின் இந்த நிறைவை அனுபவிக்கும்படி நாம் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்.

எதற்காக ஜெபிக்க வேண்டும்: 1 தீமோத்தேயு 2:4-ல் தொடர்ந்து கூறப்பட்டுள்ளபடி, “எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் ஜெபிக்க வேண்டும்.”

மறுபடியும் பிறந்த நம்முடைய ஆவியின் மூலமாக, தேவனையும் அவருடைய சத்தியத்தையும் அனுபவப்பூர்வமாக அறிந்து, இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். இந்த சத்தியம் உலக வழிகளிலிருந்து மாறுபட்ட தேவனுடைய ராஜ்யத்தை ஆளுகை செய்கிறது.

ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் என்ற நிச்சயம் உண்டு.

1 தீமோத்தேயு 2:3 — “நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது.” இந்தவசனம்2 மற்றும்4 ஆகிய இரண்டு வசனங்களிலும்கூறப்பட்டுள்ளதேவனுடையசித்தத்தைக்குறிக்கிறது:எல்லாமனுஷரும்இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிந்துகொள்ளவும், நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலாக வாழவும் வேண்டும் என்பதே தேவனுடைய நன்மையான சித்தம். பிரியமானது என்பதற்கு, அந்த ஜெபம் நல்லதாகவும், தேவபக்தியுள்ளதாயும், தேவனுக்குப் பிரியமானதாயும் இருக்கிறது என்று அர்த்தம். ஏனென்றால், அந்த ஜெபம் அவரிடமிருந்தே வருகிறது; ஆகவே, அவர் அதற்குப் பதிலளிப்பார். இந்த ஜெபங்கள் நமக்கும் நன்மை தரும் என்பதைக் கவனியுங்கள். அவற்றின் மூலம் நாம் எல்லாப் பக்தியோடும் தேவபயத்தோடும் கலகமில்லாமல் அமைதலாக வாழ முடியும்

(இந்த வெற்றுப் பக்கத்தைப் பயன்படுத்தி உங்கள் நாட்டின் அரசாங்கத் தலைவர்களின் பெயர்களைப் பட்டியலிடுங்கள்.)